# Eastern University, Sri Lanka
## Faculty of Commerce and Management
## External Degree
## Part III Examination in Bachelor of Economics -2010/2011 (September 2014)
## (Proper/Repeat)
## EXE 4012 Research Methods in Economics

சகல வினாக்களுக்கும் விடை தருக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

1. (a) ஆய்வு என்பது பிரச்சினை ஒன்றினை முறைமையாக விசாரனை செய்து அதற்கான தீர்வினை கண்டறியும் ஒரு விடயமாகும். இக் கூற்றினை விளக்குக.

(b) சிறந்த ஆய்வின் ஒன்றின் பண்புகளில் ஒன்று கட்டுப்பாடானதாக (Controlled) இருத்தலாகும். இப் பண்பினை விளக்குக.

(c) கணிய ரீதியான ஆய்வுகளுக்கும் (Quantitative Researches) பண்பு ரீதியான ஆய்வுகளுக்கும் (Qualitative Researches) இடையிலான வேறுபாடுகள் ஐந்தினைக் குறிப்பிடுக.

(d) பின்வரும் ஆய்வுத் தலைப்புகள் விபரண ஆய்வு (Descriptive Research) வகையினைச் சார்ந்ததா அல்லது இணைய ஆய்வு (Correlational Research) வகையினைச் சார்ந்ததா என அடையாளம் காண்க:

(i) ஊழியர்களின் செயற்றிறன் மீது தொழில் பயிற்சி ஏற்படுத்தும் தாக்கம்.

(ii) அரச வரிக் கொள்கைகள் மீதான பொது மக்களின் மனப்பாங்கு.

(iii) நிறுவன முகாமையாளர்களின் தகவல் தொழிநுட்ப திறன்கள்

(iv) பணவீக்க வீதத்திற்கும் பணநிரம்பலுக்குமிடையிலான தொடர்பு.

(v) தொழிநுட்ப வளர்ச்சி மனிதவள பயன்பாட்டு மட்டத்தில் ஏற்படுத்தும் தாக்கம்.

(20 புள்ளிகள்)

2. (a) ஆய்வுப் பிரச்சினை தொடர்பாக "ஆய்வு விடயம்" மற்றும் "ஆய்வுக் குடித்தொகை" எனும் இரண்டு அம்சங்களை விளக்குக.

(b) "சார்ந்த மாறி" மற்றும் "சாரா மாறி" எனும் மாறிகளை உதாரணம் மூலம் விளக்குக.

(c) ஆய்வுகளில் எண்ணக்கருக்கள் எவ்வாறு நடைமுறையாக்கம் செய்யப்படுகின்றன என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

(d) பாடசாலை மாணவர்களின் பொதுத்தராதர பரீட்சைகளின் அடைவு மட்டத்தினை அதிகரிப்பதில் பல்வேறு வகையில் இணைந்தவாறு ஆசிரியர் கற்பித்தல் முறை பயிற்சி திட்டமும் பாடசாலை வளங்கள் அபிவிருத்தித் திட்டமும் எவ்வாறு பங்களிப்புச் செலுத்துகின்றன என்பதனை ஆய்வு செய்ய நீங்கள் விரும்புவதாகக் கருதுக. இதனைப் பரீட்சிப்பதற்கு பொருத்தமான கருதுகோள்களை நிறுவுக.

(20 புள்ளிகள்)

3. (a) ஆய்வு வடிவமைப்பு (Research Design) என்பதனால் நீங்கள் விளங்கிக் கொள்வதென்ன?

(b) அரச சார் வாழ்வாதார எழுச்சி திட்டங்களினதும் அரச சார்பற்ற நிறுவனங்களின் வாழ்வாதார எழுச்சி திட்டங்களினதும் வினைத்திறன்களை ஒப்பீட்டு ஆய்வு செய்ய பொருத்தமான ஆய்வமைப்பு (Study Design) ஒன்றினை சிபாரிசு செய்து அதனை வரைபட உதவியுடன் விளக்குக.

(c) முன்-பின் ஆய்வு வடிவமைப்பு (Before and After Study Design) எவ்வகையான ஆய்வுப் பிரச்சினைகளுக்கு பொருத்தமானதாக அமையும் என ஆராய்க.

(d) பரீட்சித்தல் ஆய்வு வடிவமைப்பு (Experimental Study Design) அடிப்படையிலமைந்த பல்வேறு ஆய்வு வடிவமைப்புகளை குறிப்பிடுக.

(20 புள்ளிகள்)

4. (a) தரவு திரட்டும் கருவியின் நம்பகத்தன்மை (Reliability of Instrument) என்பதனால் நீங்கள் விளங்கிக் கொள்வதென்ன?

(b) வினாக்கொத்து முறை மூலம் தரவு திரட்டும் முறைகளின் நன்மை தீமைகளை ஆராய்க.

(c) நேர்காணல் மூலம் தரவுகள் திரட்டுவது மிகவும் பொருத்தமானதாகக் காணப்படும் சந்தர்ப்பங்களை ஆராய்க.

(d) மாறிகளை அளவிடும் மனப்பாங்கு ரீதியான அளவு கோல்களைக் (Attitudinal Scales) குறிப்பிட்டு அதில் ஒன்றைப் பற்றி விபரிக்குக.

**(20 புள்ளிகள்)**

5. (a) எழுமாற்று மாதிரியமைத்தல் (Random Sampling) முறைகளைக் குறிப்பிட்டு அதில் ஒன்றைப் பற்றி விபரிக்குக.

(b) மாதிரியமைத்தல் கோட்பாடுகள் மூன்றினைக் குறிப்பிட்டு (Principles of Sampling) அதில் ஒன்றைப் பற்றி விளக்குக.

(c) ஆய்வுகளில் தரவு முன்வைத்தலுக்குப் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான அட்டவணை மற்றும் வரைபட முறைகளை விளக்குவதுடன் புள்ளிவிபர பகுப்பாய்வு முறைகளையும் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(d) ஆய்வு முன்மொழிவு ஒன்றில் உள்ளடங்கும் விடயங்களை சுருக்கமாக குறிப்பிடுக.

**(20 புள்ளிகள்)**